## பகுதி நேர தீவிர முறையில் கோழி வளர்ப்பு ஒரு வெற்றிக் கதை

உழவுத் தொழிலோடு இணைந்த தொழில்களில் கோழி வளர்ப்பும் ஒரு முக்கியமான தொழிலாகும். முன்பு விவசாயிகள் பயிர் சாகுபடியோடு சேர்த்து ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற கால்நடை வளர்ப்பை மேற்கொண்டனர். இதன் மூலம் நிரந்தரமான ஒரு கூடுதல் வருமானம் கிடைத்தது. கோழி வளர்ப்பிற்கு தனியாக ஒரு இடம் ஏதுமில்லாமல் புறக்கடைகளில் கோழி வளர்த்து வந்தனர். இதனை சிறிய அளவில் செய்த வந்தனர். ஆனால் இன்றைய காலகட்டத்தில் கோழி வளர்ப்பு தொழிலை ஒரு முழு நேர தொழிலாக தனியாக ஒரு கொட்டகை அமைத்து செய்கின்றனர்.

இந்த வகையில் பகுதி நேர தீவிர முறையில் கோழி வளர்ப்பு தொழில் செய்து வெற்றிக் கண்ட விவசாயி திரு.மாதேஷ் த/பெ. காவேரி தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம் பாப்பாரப்பட்டியைச் சேர்ந்தவர்.இவர் இந்த கோழி வளர்ப்பினை கடந்த ஒரு வருடமாக செய்து வருகின்றார். கோழி வளர்ப்பு தவிர தனது ஒரு ஏக்கர் விவசாய நிலத்தில் தீவனப்புல் சாகுபடி செய்து வருகிறார். இது இவரிடமுள்ள 3 மாடுகளுக்கு தீவனத் தேவையை பூர்த்தி செய்கின்றது. பத்தாம் வகுப்பு வரை படித்துள்ள திரு.மாதேஷ் அவர்களின் மனைவியும் கோழி வளர்ப்பினை ஒய்வு நேரத்தில் கவனித்து கொள்கிறார்.

இவர் இதற்கு முன்பு காண்டராக்ட் தொழிலை செய்து வந்துள்ளார். நண்பர்களின் மூலம் வளர்ப்பினை தீவிர முறையில் அதிக எண்ணிக்கையில் செய்தால் நல்ல வருமானம் பெறலாம் என கேள்விப்பட்டு அதனைப் பற்றி மேலும் அறிந்து கொள்ள வேளாண்மை அறிவியல் நிலையம் ப்பபாரப்பட்டியல் மேலும் தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டார். இவர் முன்பு 50 கலப்பின நாட்டுக் கோழிகளை புறக்கடையில் சிறு கூண்டு அமைத்து வளர்த்து வந்தார். கடந்த வருடம் தீவிர முறையில் கோழி வளர்ப்பு செய்ய ஆரம்பித்தார். அசில் இனக் கோழிகளை 200 எண்ணிக்கயில் வளர்த்தார். ஒரு மாத கோழிக்குஞ்சிகளை வாங்கி இரண்டு மாதம் வளர்த்து மூன்று மாதக் கோழிகளை விற்பனை செய்கிறார். குஞ்சு பொறிப்பது செய்ய இயலவில்லை என்பதால் ஒரு மாத வயது கோழிக்குஞ்சுகளை (சுமார் 300 - 500 கிராம் எடையுள்ள) வாங்கி மூன்று மாதம் வரை வளர்க்கின்றார். மூன்று மாதம் முடிந்த பின் ஒரு கோழி 1.5 கிலோ எடை அதிகரிக்கும்.

### கொட்டகை அமைப்பு

குறைந்த செலவிலான கொட்டகை அமைத்துள்ளார். இதில் ஏற்கெனவே பயன்படுத்திய இரும்பு பைப், குச்சி மற்றும் வலை கொண்டு குறைந்த செலவில் எளிய முறையில் 10x15 அடி என்ற அளவில் கொட்டகை அமைத்துள்ளார்.

### கோழி இனம்

அசில் இனக் கோழிகளை வளர்க்கின்றார். இது கறி மற்றும் முட்டைக்காக வளர்க்கப்படும் இனமாகும். ஆனால் இவர் கறிக்காக மட்டுமே இந்த அசில் இனக் கோழிகளை வளர்க்கின்றார்.

### தீவன மேலாண்மை

கம்பு, சோளம், உடைந்த அரிசி மற்றும் மற்ற தானியங்களை தீவனமாக பயன்படுத்துகிறார். மேலும் SKM கோழி தீவனம் தினமும் 20 கிலோ என்ற அளவில் ஒரு நாளைக்கு 4 முறை திவனம் அளிக்கின்றார். இதை தவிர 4 – 5 மணி நேரம் திறந்த வெளியில் தீவனத்திற்கு விடுகின்றார்.

### தடுப்பூசி

வெள்ளைக் கழிசல் நோய்க்கு தடுப்பூசி இரண்டு மாத வயதில் போடப்பட்டது. இது கால்நடை துறையில் இலவசமாக கொடுக்கப்படுகின்றது.

### வரவு செலவு

| விபரம் | செலவு (ரூ) |
|---|---|
| கோழிக் கொட்டகை | 15000 |
| கோழிக் குஞ்சு (ரூ 75/ குஞ்சு) 200x75 | 15000 |
| தீவனம் (20 கிலோ/ நாள் ஒன்றுக்கு 20 கிலோ x60 நாளுக்கு ரூ.28800 /-<br>1200 கிலோ மொத்த செலவு<br>(வீட்டு ஆட்களே பார்த்து கொள்வதால் ஆள் தேவை இல்லை) | 28800 |
| **மொத்தம்** | **58800** |
| **வரவு** | |
| ஒரு கோழி ரூ. 150 வீதம் 180 கோழிக்கு (200 கோழிகளில் 10 சதம் இறப்பு ஏற்படும்)<br>150x180 ஒரு முறைக்கு =ரூ.27000 /-<br>வருடத்திற்கு 5 முறை விற்பனை செய்யும் போது 27000x5 | 135000 |
| **மொத்த வருமானம்** | 135000 |
| **நிகர இலாபம்** | **76200** |

நிகர வருமானம் ==ரூ76200 /-

இதன் மூலம் வருடத்திற்கு ரூ. 76200 மாதம் சராசரியாக ரூ.6000 முதல் ரூ.6500 வரை கிடைத்தது. எனவே நிலமற்ற குறைந்த நிலம் கொண்ட விவசாயிகள் இந்த பகுதி நேர திவிர கோழி வளர்ப்பினை செய்தால் நல்ல வருமானம் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

முகவரி
திரு.கா. மாதேஷ்
த பெ. காவேரி
பாப்பாரப்பட்டி
பென்னாகரம் வட்டம்
தருமபுரி மாவட்டம்
அலைபேசி : 9976892545

